**செய்தி வெளியீடு எண்: 432** **நாள்: 05.07.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (5.7.2018) தலைமைச் செயலகத்தில், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் ‘108’ அவசரகால ஆம்புலன்ஸ் சேவைக்காக, 4 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் GPS கருவி பொருத்தப்பட்ட 25 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்கள் மற்றும் குடும்ப நலத் துறையின் பயன்பாட்டிற்காக 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 9 புதிய ஜீப் வாகனங்கள் ஆகியவற்றின் சேவையை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

சாலை விபத்துகளில் ஒவ்வொரு ஆண்டும் விலை மதிப்பற்ற மனித உயிர் இழப்புகள் ஏற்படுகின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு, விபத்துக்களை குறைக்கவும், உயிர் இழப்புகள் ஏற்படாமல் தவிர்க்கவும், 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவையை வலுப்படுத்துதல், விபத்து சிகிச்சை மையங்கள் ஏற்படுத்துதல், தலைக்காய பிரிவுகளை வலுப்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ‘108’ அவசரகால ஆம்புலன்ஸ் சேவை திட்டத்தில் தற்போது 932 அவசரகால வாகனங்கள் இயங்கி வருகிறது. 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவை மூலமாக இதுவரை 72 லட்சத்திற்கும் மேலான பொதுமக்கள் பயனடைந்துள்ளனர். இதில் 25 விழுக்காட்டிற்கு மேல், அதாவது 18.18 லட்சம் கர்ப்பிணித் தாய்மார்கள் பயனடைந்துள்ளனர் என்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த 108 அவசரகால ஆம்புலன்ஸ் சேவையை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்ற உயரிய நோக்கில், ‘108’ அவசரகால ஆம்புலன்ஸ் சேவைக்காக 4 கோடியே 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் GPS கருவி பொருத்தப்பட்ட 25 புதிய ஆம்புலன்ஸ் வாகனங்களின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

மேலும், குடும்ப நலத் திட்டத்தை செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே, தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது. குடும்ப நல சேவையை மேலும் வலுப்படுத்தும் வகையில், சேலம், புதுக்கோட்டை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர்,

நீலகிரி, திருநெல்வேலி மாவட்ட குடும்ப நல அலுவலகங்கள் மற்றும் குடும்ப நல இயக்ககத்தின் பயன்பாட்டிற்காக 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 9 புதிய ஜீப் வாகனங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின், திட்ட இயக்குநர் (பொறுப்பு) திரு வே. ராஜாராமன், இ.ஆ.ப., மாநில நலவாழ்வு குழுமத்தின், குழும இயக்குநர் டாக்டர் டேரஸ் அகமது, இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை கூடுதல் செயலாளர் திரு.எஸ். நாகராஜன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 5.7.2018**